இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 76 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 09 – திங்கட்கிழமை 26 அக்டோபர் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 76 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 09 - Monday 26 October 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

225–ஆவது நினைவு நாள்:

மண்ணின் மானம் காத்த மருதிருவருக்கு மானமிகு வீரவணக்கம்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, அக்.26- ஆங்கிலேயரை எதிர்த்து நின்று போர் புரிந்த சிவ கங்கைச் சீமையின் சீற்றமிகு காளைகள் பெரிய மருது, சின்ன மருது ஆகியோரின் 225-ஆவது நினைவு நாளை யொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் "மண்ணின் மானம் காத்த மருதிருவருக்கு மானமிகு வீரவணக்கம்" என்று புகழாரம் சூட்டி பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து நேற்று முன்தினம் (24.10.2026), கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு : –



"மண்ணின் மானம் காத்த மருதிருவருக்கு மானமிகு வீரவணக்கம்!

புறநானூற்றுத் தமிழர் வீரத்துக்கு இலக்கணமாக ஆங்கிலேயரை எதிர்த்து நின்று போர் புரிந்த சிவ கங்கைச் சீமையின் சீற்ற மிகு காளைகள் பெரிய மருது அவர்களும் சின்ன மருது அவர்களும்.

இந்தியர் அனைவரும் வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையோடு போராடி னால் அந்நியர் ஆட்சியை அடியோடு அகற்றிடலாம் என அனைவருக்கும் முன்பே 'ஜம்புத்தீவு பிரகடனம்' வழியாக முழங்கிய சமூக நல்லிணக்க வீரர்கள் மருது சகோதரர்கள்.

உயிரைத் தியாகம் செய்து விடுதலை உணர்வை விதைத்த அந்தப் போராளி களின் நினைவு நாளில் அவர்களுக்கு என் வீர வணக்கம்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் மாமன்னர் மருது பாண்டியர்கள் 225 ஆவது ஆண்டு குருபூஜையினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு நேற்று முன்தினம் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர்கள் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன் எம்.எல்.ஏ., டி.ஆர்.பி.ராஜா, திருமதி தமிழரசி ரவிக்குமார், கழக செய்தி தொடர்புக் குழு துணைத் தலைவர் மருது அழகு ராஜ், மாவட்ட கழகத் துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் ஆகியோர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

த.வெ.க. ஆட்சியில்

குழந்தைகள் - சிறுமிகள் மாயமாவதால் அச்சம்!

சென்னை, அக். 26 -

தமிழ்நாட்டில் குழந்தை கள், சிறுமிகள் மாயமாகும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது.

த.வெ.க. ஆட்சியில் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவு வதால் பொதுமக்கள் பீதி யில் உள்ளனர்.

ராணிப்பேட்டையில் சேகர் - பிரேமா தம்பதி யின் ஒரு வயது பெண் குழந்தை கடந்த செப்டம் பர் 23ஆம் தேதி, பெற்றோ ருடன் தூங்கிக் கொண்டி ருந்த நிலையில், திடீரென மாயமானது. குழந்தை காணாமல் போய், ஒரு மாதமாகியும் இதுவரை எந்த தகவலும் கிடைக்கா மல் காவல்துறை திணறி வருகிறது.

இதேபோல், செஞ்சியை அடுத்த நடுப்பட்டு கிராமத் தில் பிறந்தநாள் கொண்டாடி விட்டு பெற்றோருடன் வீட்டில் தூங்கிய 7 வயது சிறுமி கடந்த 12ம் தேதி மாயமானார். சிறுமி மாய மாகி 13 நாட்களாகியும் இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை. சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிட் டும் சிறுமி குறித்து எந்த தகவலும் கிடைக்காமல் காவல்துறை திணறுகிறது.

இதற்கிடையே, பெரம் பலூர் மாவட்டம், வேப் பந்தட்டை தாலுக்காவில் உள்ள வெங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 10 ஆம் வகுப்பு படித்து வந்த இரண்டு மாணவிகளை காணவில்லை. இதுவரை சிறுமிகள் குறித்து எந்த தகவலும் இல்லை.

த.வெ.க. ஆட்சியில் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவு வதால் பொதுமக்கள் பீதி யில் உள்ளனர்.

மின்வாரியத்தில் 4502 மதிப்பீட்டாளர்கள் பணியிடங்கள் காலி!

கட்டணக் குளறுபடியில் 60 லட்சம் மின் இணைப்புகள்!

நிர்வாகத் திறனற்ற விஜய் ஆட்சியில் பொதுமக்கள் பாதிப்பு!

சென்னை, அக். 26 - தமிழக மின் பகிர்மான கழகத்தில் மதிப்பீட்டாளர்கள் பற்றாக்குறையை சமாளிக்க தனியார் நிறுவனங்கள் மூலம் பணியாளர்களை நியமிக்கும் திட்டம் அறிவிக் கப்பட்டும், சென்னை மற்றும் காஞ்சிபுரம் பகுதிகளில் அப்பணி இன்னும் முழுமை யடையவில்லை.

இதனால் அடுத்த மின் கட்டண கணக்கீட்டின்போது தவறுகள் ஏற்பட்டு, பொது மக்கள் கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை உருவாகுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

தமிழகம் முழுவதும் உள்ள சுமார் 3.5 கோடி மின் இணைப்புகளுக்கு, மின் பயன்பாட்டை கணக் கிட 7,565 மதிப்பீட்டாளர்கள் தேவைப்படுகின்றனர்.

ஆனால், தற்போது 3,063 பேர் மட்டுமே பணியில் உள் ளனர். மீதமுள்ள 4,502 பணியிடங்கள் காலியாக உள்ளன. அதாவது, தேவை யான பணியாளர்களில் சுமார் 60 சதவீதம் பேர் பற் றாக்குறையாக உள்ளனர். இதனால் பல பகுதிகளில் மின் பயன்பாடு தவறாக கணக்கி டப்பட்டு, அதிக மின் கட்ட ணம் விதிக்கப்பட்டதாக புகார்கள் எழுந்தன.

60 லட்சத்திற்கும் அதிகமான மின் இணைப்புகள்!

இதையடுத்து, கடந்த 2 மின் கட்டண கணக்கீட்டு சுழற்சிகளில் மின் பயன் பாட்டை மறுபரிசீலனை செய்யும் பணியை மின் வாரியம் மேற்கொண்டது.

மதிப்பீட்டாளர் பற்றாக் குறையை போக்க, கடந்த செப்டம்பர் மாதம் தனியார் நிறுவனங்கள் மூலம் பணி யாளர்களை நியமிக்க மின் வாரியம் சுற்றறிக்கை வெளி யிட்டது. நியமிக்கப்படும் பணி யாளர்களுக்கு பயிற்சி அளிப் பது உள்ளிட்ட வழிகாட்டுதல் களும் வழங்கப்பட்டன.

இருப்பினும், ஒரு மாதத் திற்கும் மேலாகியும் சென்னை மற்றும் காஞ்சிபுரம் மின் பகிர்மான வட்டங்களில் ஒப்பந்தங்களை இறுதி செய்ய முடியவில்லை என கூறப்படுகிறது.

இதனால், 60 லட்சத்திற் கும் அதிகமான மின் இணைப்புகளைக் கொண்ட இந்தப் பகுதிகளில் நிலவும் மின் பயன்பாடு கணக்கிடு தாமதத்தால் நுகர்வோர் மத்தியில் கவலையை ஏற் படுத்தியுள்ளது.

பணியாளர் கிடைப்பதில் சிக்கல்!

கோவை, வேலூர் உள் ளிட்ட சில மாவட்டங்களில் தனியார் மதிப்பீட்டாளர் களை நியமிப்பதற்கான ஒப் பந்தப்புள்ளிகள் கோரப்பட் டுள்ளன.

ஆனால், சென்னை மற் றும் காஞ்சிபுரத்தில் ஒப்பந் தங்களை இறுதி செய்வதில் சிக்கல் நீடிக்கிறது.

தனியார் நிறுவனங்கள் அதிக தொகையை கேட்ப தால், மின்வாரியத்தால் ஏற் றுக்கொள்ளக்கூடிய விலை யில் ஒப்பந்தத்தை முடிவு செய்ய முடியவில்லை என் றும், விலை தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் மின்வாரியச் செயற்பொறி யாளர்கள் தெரிவித்துள்ள னர். தகுதியான பணியாளர் கள் கிடைப்பதிலும் சிக்கல் இருப்பதாக கூறப்படுகிறது.

மதிப்பீட்டாளர் பணியிடங் கள் பெருமளவில் காலியாக உள்ள நிலையில், தனியார் நிறுவனங்கள் மூலம் பணி யாளர்களை நியமிப்பதிலும் தாமதம் நீடிப்பது மின்வாரிய நிர்வாகத்தின் செயல்பாடுகள் குறித்த கேள்விகளை எழுப் பியுள்ளது. மின் கட்டண கணக்கீட்டில் மீண்டும் குள றுபடிகள் ஏற்படாமல் தடுக்க வும், பொதுமக்கள் பாதிக்கப் படுவதை தவிர்க்கவும் மின்வாரியம் விரைந்து நட வடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

த.வெ.க. அரசு அராஜகம்!

அரசின் நில அளவைப் பணிகள் தனியார் மயம்!

சர்வேயர்கள் வேலை இழக்கும் அபாயம்!

சென்னை, அக். 26 - தமிழ்நாடு முழுவதும் அர சின் நில அளவை பணிகளை தனியார்மயமாக்க த.வெ.க. அரசு முடிவு செய்துள்ளதால், நூற்றுக்கணக்கானோர் வேலை யிழக்கும் அபாயம் ஏற்பட் டுள்ளதாக 'தினத்தந்தி' நாளேடு விமர்சித்துள்ளது.

அரசு நிர்வாகத்தில் ஒரு தாய் துறை போல் இயங்கி வந்த நில அளவை துறை தற்போது தமிழகத்தை பொறுத்த வரை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையில் 'நில அளவை மற்றும் தீர்வு பிரிவு' என்ற பெயரில் ஒரு தனி பிரி வாக இயங்கி வருகிறது.

நிலம் தொடர்பான பட்டா, சிட்டா, அடங் கல் உள்ளிட்ட ஆவணங் களை கையாளும் கிராம நிர்வாக அலுவலர்கள் வருவாய் துறையின் முது கெலும்பு போன்றவர்கள் என்றால், அதற்கு அடுத்த நிலையில் நிலத்தை அள வீடு செய்து அவற்றை உறுதி செய்பவர்களாக நில அளவையர்கள் உள்ளனர் என்று குறிப் பிட்டுள்ளது.

இந்த நிலையில், இவர் கள் தங்களை பணி நிரந் தரம் செய்ய வேண்டும், ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்ற கோரிக் கைகளை வலியுறுத்தி அரசின் உயர் அதிகாரி களை அணுகிய போது வருகிற டிசம்பர் மாதத் துடன் இவர்களை பணி நீக்கம் செய்து விட்டு, தற்காலிகமாக தேர்ந் தெடுக்கப்பட்டு பயிற்சி யில் இருப்பவர்கள் உள் ளிட்ட ஒட்டுமொத்த சர்வே பணிகளையும் ஒப்பந்த அடிப்படையில் தனியாருக்கு கொடுக்க போவதாக வெளியான தகவல் உரிமம் பெற்ற சர்வேயர்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

திடீர் என பணி நீக்கம் செய்தால் நாங்கள் வாழ் வாதாரத்திற்காக எங்கே செல்வது? நாங்கள் செய்த பணிகளால், தற் போது நில அளவை பிரி வில் தேங்கிக்கிடந்த கோப்புகள் குறைந்து, பொதுமக்கள் கொடுக் கும் மனுக்களுக்கு 30 நாட்களில் தீர்வு காணும் வகையில் மேம்பாடு ஏற்பட்டுள்ளது என்று நில அளவர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் நலன் கருதி தங்களை பணி நிரந்தரம் செய்து, கால முறை ஊதியம் வழங்க உத்தரவிட வேண்டும் என்று உரிமம் பெற்ற நில அளவர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள் ளதை குறிப்பிட்டு 'தினத் தந்தி' நாளிதழ் விரிவாக எடுத்துரைத்துள்ளது.